[30th March 1965

திரு. கே. ஏ. மதியழகன்: விடுதலைப் போராட்டத்தின் மூலமாக நாம் பெற்ற சுதந்திரத்தை பேணி வளர்ப்பதற்கான இன்னொரு கட்டம்தான் அடுத்த போராட்டமான இந்த மொழிப் போராட்டம். இதில் உயிர்த்தியாகம் செய்தவர்கள் குடும்பத்திற்கு உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விடுதலைப் போராட்டத்தோடு மொழிப் போராட்டத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் நினைக்கவில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தியாகிகளினுடைய பிள்ளைகள் பல பள்ளிக்கூடங்களில் படிப்பதால் தனித்தனியாக ஒவ்வொரு சர்ட்டிபிகேட் வாங்கவேண்டுமென்று விதி இருக்கிறதா ? அதைப் பற்றி புகார் வந்திருக்கிறதா ? ஒரே சர்ட்டிபிகேட்டைக் கொண்டு நகல்களை மற்ற பள்ளிகளுக்கு கொடுப்பதற்கு வசதி செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி தகவல் ஒன்றும் இல்லை. விவரம் வேண்டுமென்றால் தனிக்கேள்வி வேண்டும்.

Memorial to Sri Jawaharlal Nehru

* 363 Q.—Sri V. Sankaran : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to set up a memorial in this State to the late Prime Minister, Sri Jawaharlal Nehru; and

(b) if so, the details thereof ?

The Hon. Sri M. Bhaktavatsalam : (a) Yes.

(b) The details are under consideration.

திரு. வை. சங்கரன் : சட்டமன்ற அறையிலே காலியாக உள்ள இடத்தில் பண்டிட் நேருவின் உருவத்தை விரிவான முறையில் அமைப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் முன்வந்தால் அதை சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமா ? அல்லது சர்க்காரே அதை வைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி ஏதாவது கோரிக்கை வந்தால் அதற்குமேல் என்ன செய்யவேண்டுமென்று அரசாங்கம் யோசிக்கும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : புதிதாக கட்டப்படுகிற சட்ட சபை விடுதிக்கு "நேருஜி சட்டசபை விடுதி" என்று பெயர் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏற்கெனவே கட்டப்பட்ட கட்டத்திற்கு அவர் பெயர் வைப்பது அப்பெரியோருடைய நினைவைப் பாராட்டுவதாகாது.

30th March 1965]

திரு. கே. எஸ். மணி: தியாகிகள் என்று யார் யார் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது 362-வது கேள்வியைச் சேர்ந்தது.

புலவர் கா. கோவிந்தன் : வட ஆற்காட்டில் வேலூர் நகராட்சி ஜவஹர்லால் நேருவின் சிலையைப் பொது இடத்தில் வைப்பதற்கு அரசாங்கத்தின் அனுமதியை கோரியதா ? அனுமதி மறுக்கப் பட்டதா ? மறுக்கப்பட்டதென்றால் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : டெல்லியில் அமைக்கப்போகிற ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம் போல, இங்கும் நம் மாநிலத்தில் ஒரு பல்கலைக் கழகம், மத்திய சர்க்கார் உதவி பெற்று, நாமும் கொஞ்சம் பணம் போட்டு, 'ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம்' என்ற பெயர் வைத்து நிறுவ அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் உறுப்பினர் கூறுவது நல்ல யோசனைதான். ஆனால் இதற்கெல்லாம் மத்திய அரசாங்கம் அனுமதியளிக்க முன்வரவேண்டும். இம்மாதிரி நிறுவுவதற்கு மத்திய அரசாங்கம் என்ன உதவி செய்யும் என்று தெரியாமல் இதைப்பற்றி நான் ஒன்றும் உறுதியாக சொல்வதற்கில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இப்போது நாம் மதுரையில் நிறுவ இருக்கும் சர்வகலாசாலைக்கு, 'ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம்' என்று பெயர் நிறுவப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே கூறினேன். மதுரையில் பல்கலைக் கழகம் அமைப்பது என்பது முன்பேயே முடிவு செய்யப்பட்டது. புதிதாக நேரு அவர்களின் நினைவுக்காக என்று செய்த முடிவு இல்லை. தற்போது பெயர் வைப்பது சரி அல்ல. அப்படி அவர் பெயர் மட்டும் வைத்து பெருமைகொள்வது தற்போதைய நிலைமைக்கு வேண்டியது இல்லை.

திரு. வை. சங்கரன் : நேரு அவர்கள் பிறந்த தினமான நவம்பர் 14-ம் தேதியை மனதில் வைத்துக்கொண்டு, அவர் வகுத்த ஜனநாயக சோஷலிசத்தை போற்றும் வகையில் ஒரு 'விவாத அரங்கை' நிறுவ அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை. வேறு யாராவது வேண்டுமானால் ஏற்பாடு செய்யலாம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நேரு அவர்கள் மறைந்து ஏறக்குறைய ஓர் ஆண்டு காலம் ஆகிறது. உலகத்திலே பெரும் தலைவராக இருந்த கென்னடி இறந்த உடனே, அதே போல் இங்கிலாந்தில் சர்ச்சில் இறந்த உடனே, அங்குள்ள அரசாங்கமே அவர்

[30th March 1965

களுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப முற்பட்டு இருக்கின்றன. ஆனால் இங்கே நேரு இறந்து ஒரு ஆண்டு ஆகியும், இன்னும் " பரிசீலனை செய்கிறோம், யோசனை செய்கிறோம் " என்று அமைச்சர் சொல்கிறார்கள். இது நியாயமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அயல் நாடுகளில் என்ன செய்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த நாட்டில் நேரு அவர்களை கௌரவிக்கும் வகையிலே எம்மாதிரி நினைவுச் சின்னங்களை எழுப்பலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். நியாயமோ, அநியாயமோ, கனம் அங்கத்தினர் வைத்துக்கொள்ளலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : நேருவிற்கு நினைவுச் சின்னம் எழுப்ப ஒரு குழு அமைக்கப்பட்டு இருப்பதாக அறிகிறேன். அந்தக் குழு இது பற்றி ஏதாவது முடிவு செய்து அரசாங்கத்திற்கு அறிவித்திருக்கிறதா ? அதன் பேரில் அரசாங்கம் முடிவு எடுத்து இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. மற்ற மாநிலங்களும் சேருவதற்கு, தமிழ் நாட்டிலும் ஒரு குழு அமைக்கப்பட்டு விட்டது என்று முன்பே விவரம் கூறி இருக்கிறேன். மத்திய குழு என்னென்ன செய்ய வேண்டியது என்று யோசித்துக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் எடுக்கும் முடிவைப் பொறுத்த வகையில் தான், தமிழ்நாட்டில் நேருவிற்கு நினைவுச் சின்னம் அமைப்பதில் நாம் என்ன செய்ய முடியும் என்பதை யோசிக்க முடியும்.

திரு. அ. ராமச்சந்திர ராயர் : புதிதாக அமைக்கப்போகும் நம் லெஜிஸ்லேடர்ஸ் ஹாஸ்டலுக்கு, நேருவின் பெயர் வைக்கப் படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்வி முன்பே கேட்டு விடை அளிக்கப்பட்டது.

திரு. சா. கணேசன்: நேரு அவர்களின் ஞாபகார்த்தமாக, அவர்களுடைய நினைவு நிதிக்கு தமிழ்நாட்டிலும் ஒரு அளவுக்கு லட்சக்கணக்கான ரூபாய்கள் சேர்ந்து இருக்கின்றன. இவற்றை எல்லாம் மாநில அளவிலே பயன்படுத்தப் போவதாக உத்தேசமா அல்லது எல்லாவற்றையும் சேர்த்து தேசிய அளவிலே இயங்குகின்ற நிலை ஏற்பட்டு இருக்கிறதா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மத்திய, மாநில எல்லா குழுவையும் சேர்த்து பணம் வசூல் செய்ய முற்பட்டு இருக்கிறது. இதில் ஒரு பகுதி மாநிலங்களுக்கும் நினைவுச் சின்னம் எழுப்ப கொடுக்கப்படலாம். இதோடு மாநில வகையிலும் வசூல் செய்யலாம். நாம் என்ன திட்டமிட்டு வசூல் செய்யவேண்டும், என்ன செய்ய வேண்டும், என்ன செய்யப்போகிறோம் என்பது, இந்த

30th March 1965]

மத்திய குழு என்ன முடிவு செய்கிறதோ அதை பொறுத்து இருக்கிறது. அதல்லாமல் மாநிலத்தில் நினைவுச் சின்னம் வைக்கப் படுவதாக இருந்தால், இதற்கு நாம் எவ்வளவு செலவு செய்ய முடியும், இதற்கு எவ்வளவு நிதி தருவார்கள் என்பதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சா. கணேசன் : இப்போது இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி பத்திரிகைகளின் மூலமாக சில லட்சம் ரூபாய்கள் வசூலாகி இருக்கிறதே, அதற்கும் இந்த சர்க்காருக்கும் ஏதாவது தொடர்பு உண்டா ? அந்தப் பணம் இந்த சர்க்கார் மூலமாக செல வழிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த பத்திரிகைகள் வசூல் செய்வதற்கும், இந்த அரசாங்கத்திற்கும் தொடர்பு இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நேருவிற்கு நினைவுச் சின்னம் கட்டுவதற்கு இதுவரைக்கும் தமிழ்நாட்டிலே எங்கெங்கே இருந்து வேண்டுகோள் வந்திருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : நேருஜியின் நினைவுச் சின்னமாக சென்னைக் கடற்கரையில் பொருத்தமான இடத்தில் ஒரு சிலையை வைப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சிலை வைப்பது பெரிய காரியம் இல்லை. இதைவிட பெரிய சின்னங்கள் எழுப்ப நாம் நினைக்கும்போது சிலை வைப்பது சுலபமாக நிறைவேற்றக்கூடிய காரியம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : 20 லட்சம் மக்கள் நிறைந்த சென்னை போன்ற நகரிலே சாதாரண ஏழை எளியவர்கள் பயன் படுத்தக் கூடிய வகையிலே, ஒரு 'புதிய மன்றம்' தேவைப் படுகிறது. அந்த மன்றத்தை நேருவின் பெயரால் நிறுவ அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சென்னை நகரிலே குழந்தைகள் பாதுகாப்புக்கு உரிய வகையிலே, இப்போது நகரசபை நடத்துகிற அசோக் விஹார் போன்று, அதே மாதிரி இன்னும் விரிவான, நூதன முறையிலே ஒரு சிறந்த ஸ்தாபனத்தை குழந்தைகளுக்காக சென்னை நகரிலே அமைக்கவேண்டுமென்பது என் ஒரு கருத்து. மற்றொரு கருத்து குழந்தைகளும், வயது வந்தவர்களும் பயன்படுத்தக்கூடிய அளவிலே 'நேரு மியூஸியம்' அமைக்கலாம் என்பது. மற்ற சகாக்களோடு கலந்து, ஆலோசித்து, நிரந்தரமாக நாம் என்ன திட்டங்கள் நிறைவேற்றலாம் என்பது பின்னால் முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

[30th March 1965

திரு. வை. சங்கரன்: நாட்டுப்பற்றையும், நாட்டு ஒருமைப்பாட்டையும் வெளியிடுவதற்காக பாட புத்தகங்களில், நேருவின் சுயசரிதத்திலிருந்து, ஒவ்வொரு பகுதியை, ஒவ்வொரு வகுப்பிற்கும் பாடமாக வைப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நேருவின் நினைவுச் சின்னமாக மட்டுமின்றி பொதுவாக நாட்டுக்கு நல்வாழ்வு அளித்த தலைவர்களின் சரிதைகளை, குழந்தைகள் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டி, பாட புத்தகங்களில் வைக்கவேண்டுமென்பது கருத்து. இதிலே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

திருமதி செகதாம்பாள் வேலாயுதம்: தலைவர் அவர்களே, நேருஜியின் படம் 1966-ம் ஆண்டு முடிவதற்கு முன் வைப்பதற்கு முடியுமா என்று அறிய விரும்புகிறேன். மே, 27-ம் தேதி நேரு காலம் சென்ற தினம். அந்த நாளை ஒப்பிட்டு சட்ட மன்றத்திலே அவர் படத்தை திறக்க அரசாங்கம் முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் உறுப்பினர் கூறிய யோசனை ரொம்ப அறிய யோசனை. கனம் உறுப்பினர்கள் அக்கறை எடுத்துக்கொண்டால், அரசாங்கம் வேண்டிய ஆதரவு அளிக்கும். இல்லை, அரசாங்கமே வைக்கவேண்டுமென்று சொன்னால், பின்னால் யோசித்து முடிவு செய்ய வேண்டிய விஷயம் இது.

திரு. ம. கமலநாதன்: இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி பத்திரிகைகளின் மூலம் வசூலிக்கப்படுவதும் பொது மக்கள் பணம் தான். அதற்கும் அரசாங்கத்துக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் அரசாங்கத்தின் உதவி கோரி நாங்கள் நினைவுச் சின்னம் எழுப்ப முன்வந்தால் அரசாங்கம் உதவி செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி பத்திரிகைகள் மத்திய குழுவிற்காக வசூலிக்கிறார்கள். மத்திய குழு நிதியில் சேர்த்துவிடுவார்கள். மத்திய குழு இந்த நிதியை வைத்துக்கொண்டு என்ன முடிவு செய்யவேண்டியிருக்கும், என்ன முடிவு செய்யும் என்பது எனக்கு தெரியாது.

திரு. எம். எஸ். மணி: தலைவர் அவர்களே, நேரு அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதற்காக சர்வ கட்சி குழு அமைத்து ஆலோசனை கேட்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த சட்ட மன்றமே சர்வ கட்சி குழு. பெரிய சர்வ கட்சி குழுவாக அமைந்து இருக்கிறது. மன்ற உறுப்பினர்கள் கருத்தை எல்லாம் சொல்லலாம்.